**செய்தி வெளியீடு எண்:103** **நாள்:19.05.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலகத்திற்கு வரும் பணியாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அனைவரையும், பரவிவரும் கொரோனா (COVID-19) நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கும் விதமாக, காலால் இயக்கும் தண்ணீர்க் குழாய்களைத் தலைமைச் செயலகத்தின் முக்கிய வாயில்களில் அமைத்து, கைகளை சுத்திகரிப்பான் உபயோகித்து கழுவிச் செல்லும் வசதியை **19.05.2021** அன்று தொடங்கி வைத்தார்கள். “**கைகளை சோப்புப்போட்டு நன்கு கழுவுவோம் கொரோனாவை முற்றிலும் அழிப்போம்**” என்ற விழிப்புணர்வு வாசகத்திற்கு இணங்க, கொரோனா சங்கலியை உடைத்தெறிவதற்கு இந்த வசதியினை அனைவரும் தவறாது கடைபிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**